# News Release

# அதிகாரப்பூர்வ அறிவிப்பு!

*புதிய கார்வில் சமூக மையம், நூலகம் மற்றும் மாவட்ட பூங்கா திறக்கப்பட்டது*

**வாகன், ஒன்டாறியோ (ஜூலை 6, 2025)** – அனைவரும் மகிழ்ச்சியாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு புதிய செயல்பாட்டு மையமாகக் கார்வில் சமூக மையம், நூலகம் மற்றும் மாவட்ட பூங்காவின் அதிகாரப்பூர்வ திறப்பை வாகன் நகரம் பெருமையுடன் அறிவிக்கிறது!

சிறப்பு விழா ஜூலை 6 அன்று 655 Thomas Cook Ave-ல் அமைந்துள்ள நவீன வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மேயர் ஸ்டீவன் டெல் டுகா, கவுன்சில் உறுப்பினர்கள், நூலகப் பிரதிநிதிகள் மற்றும் அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மேயர் டெல் டுகாவின் உரை, ரிப்பன் வெட்டும் விழா மற்றும் பல இலவச நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந்தப் புதிய சமூக மையத்தில் பின்வரும் நவீன வசதிகள் உள்ளன:

- உடற்பயிற்சி கூடம்
- நடனம்/உடற்கல்வி பயிற்சி மையம்
- வாகன் பொது நூலகத்தின் புதிய கிளை, கார்வில் நூலகம்
- ஸ்பிளாஷ்பாட் (நீரில் விளையாடும் பகுதி)
- கற்றல் சமையலறை
- தேர்ந்தெடுக்கப்பட்ட கார்டியோ உபகரணங்களுடன் கூடிய நடக்கும்/ஓடும் பாதை
- உடைமாற்றும் அறைகள்
- திறந்தவெளி விளையாட்டு மைதானங்கள்
- செயல்பாட்டு அறைகள்
- இரண்டு நீச்சல் குளங்கள்
- மேலும் பல!

கார்வில் சமூக மையம் அனைத்து வயதினருக்கும், விருப்பங்களுக்கும், திறன்களுக்கும் ஏற்ற வகையில் பல்வேறு வகையான, ஆற்றல்மிக்கத் திட்டங்களை வழங்குகிறது. குடும்பத்தினர் கோடைக்கால முகாம்கள் மற்றும் கோடைக்காலப் பொழுதுபோக்குத் திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதே நேரத்தில், அனைத்து நிலைகளிலுமுள்ள நீச்சல்கலை பயிற்சியாளர்களும் – நீச்சல் பயிற்சி, சிறப்புத் தேவையுள்ளவர்களுக்குத் தனிப்பட்ட உதவி, நீச்சல் பயிற்சியாளர் அல்லது உயிர்காக்கும் பணிக்கான பயிற்சி, மற்றும் நீரில்

நடைபெறும் உடற்பயிற்சி வகுப்புகள், நீச்சல் பாதையில் தொடர்ச்சியாக நீந்துதல், பொழுதுபோக்கு நீச்சல் போன்ற பல்வேறு வகையாக முன்பதிவு இல்லாமல் கலந்துகொள்ளக்கூடிய நீச்சல் அம்சங்கள் உள்ளிட்ட முழுமையான நீரியல் செயல்பாடுகளிலிருந்து பயனடையலாம். மையத்தில் மேலும், யோகா மற்றும் பிலாட்டீஸ் முதல் தசை வலிமை அடிப்படையிலான பயிற்சிகள் மற்றும் உயர் தீவிர உடற்பயிற்சி வகைகள் வரை, முன்பதிவு இல்லாமல் கலந்துகொள்ளக்கூடிய உடற்பயிற்சி வகைகள் பரந்த கால அட்டவணையுடன் வழங்கப்படுகின்றன. விளையாட்டு ஆர்வலர்களுக்காக, கூடைப்பந்து, கைப்பந்து, பிக்கில்பால் மற்றும் பெற்றோர்-குழந்தை விளையாட்டுகளுக்கான முன்பதிவு இல்லாமல் கலந்துகொள்ளக்கூடிய இடமாக உடற்பயிற்சி கூடம் திகழ்கிறது. இது முழுச் சமூகத்திற்கும் ஏற்ற, அனைவரும் பங்கேற்கக்கூடிய செயல்பாட்டான ஒரு சூழலை உருவாக்குகிறது.

கார்வில் சமூக மையம், நூலகம் மற்றும் மாவட்ட பூங்காவில் கிடைக்கும் வசதிகள் மற்றும் திட்டங்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு, தயவுசெய்து vaughan.ca/**CarrvilleCC** இணையதளத்தைப் பார்வையிடவும். புதிய நூலகம் பற்றிய மேலதிக தகவல்களுக்கு, vaughanpl.info/**cv** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

**மேற்கோள்கள்**

"அதிகாரப்பூர்வ அறிவிப்பு – நவீன வசதிகளுடன் கூடிய கார்வில் சமூக மையம், நூலகம் மற்றும் மாவட்ட பூங்கா தற்போது திறக்கப்பட்டுள்ளது! இந்த முக்கியமான நகரத் திட்டம், குடிமக்கள் ஒன்று கூடுவதற்கான இடத்தை வழங்குவதில், தரமான நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகளை வழங்குவதில், மேலும் எங்கள் வாழ்வாதாரத் தரத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றும். வாகன் நகரம், மக்கள் பயன்பாட்டிற்கான சிறந்த தரமான வசதிகளை வழங்குவதில் பெருமை கொள்கிறது. இந்த வசதிகள் எந்த அளவிலும் மற்றவற்றை விடக் குறைவானவை அல்ல என்பதே எங்களின் பெருமை. இந்தப் புதிய உள்ளூர் நினைவுச்சின்னத்தை உருவாக்குவதற்காக முழுமையான உழைப்பும் அர்ப்பணிப்பும் காட்டிய சிறப்பான நகர நிர்வாகப் பணியாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மையம் வருங்காலத்தினராலும் மகிழ்வுடன் பயன்படுத்தப்படும். தன் சமூக வாசிகளுக்குத் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் சேவை செய்து வரும் வார்டு 4 கவுன்சிலர் கிரிஸ் ஐன்ஸ்வொர்த் அவர்களை நான் பாராட்டுகிறேன். கார்வில் சமூக மையம், நூலகம் மற்றும் மாவட்ட பூங்காவுக்கு அனைவரையும் வரவேற்க ஆவலுடன் காத்திருக்கிறேன்."

- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

"புதிய கார்வில் சமூக மையம், நூலகம் மற்றும் மாவட்ட பூங்காவுக்கு வார்ட் 4 இன் குடியிருப்பாளர்களை அதிகாரப்பூர்வமாக வரவேற்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. நீங்கள் வாசிக்கவும் படிக்கவும் அமைதியான இடத்தைத் தேடினாலும் சரி, உடற்பயிற்சி செய்யவும் விளையாடவும் இடம் தேடினாலும் சரி, இந்த அழகான புதிய வளாகம் உங்கள் வயதும் திறனும் பொருட்படுத்தாமல், அனைவரின் தேவைகளையும் பூர்த்திச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நம் சமூகத்திற்குச் சிறந்த சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வரும் மேயர் ஸ்டீவன் டெல் டுகா அவர்களின் நிலைத்த தலைமைத்துவத்திற்கும், வாகன் நகரத்தின் அற்புதமான ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மையத்தில் வழங்கப்படும் பல்வேறு வசதிகளையும் திட்டங்களையும் நீண்ட ஆண்டுகளாக நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் அனுபவிப்பதைக் காண நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்!"
– வார்டு 4 கவுன்சிலர் கிரிஸ் ஐன்ஸ்வொர்த்

**முக்கியத் தகவல்கள்**

- கார்வில் சமூக மையம், நூலகம் மற்றும் மாவட்ட பூங்கா, பொதுமக்கள் மகிழ்ந்து பயன்பெறும் வகையில் ஜூன் 30, 2025 அன்று திறக்கப்பட்டது.
- இதன் அதிகாரப்பூர்வ திறப்புவிழா ஜூலை 6 அன்று, வாகன் நகரத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் ரிப்பன் வெட்டும் விழா மற்றும் சமூகத்திற்கான பல இலவச செயல்பாடுகள் இடம்பெற்றன.
- இந்தப் புதிய சமூக மையம் 655 Thomas Cook Ave-ல் அமைந்துள்ளது.
- இதில் புதிய விளையாட்டு மைதானம், ஸ்பிளாஷ்பாட், பம்ப் ட்ராக், கூடைப்பந்து மைதானங்கள், உடற்பயிற்சி கூடம், நடன பயிற்சி மையம், உடற்பயிற்சி பகுதி, நீச்சல் குளம் மற்றும் பல வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**மேலும் அறிய**

- கார்வில் சமூக மையம், நூலகம் மற்றும் மாவட்ட பூங்கா வலைப்பக்கம்
- வாகன் நகரத்தின் பொழுதுபோக்குச் சேவைகள் வலைப்பக்கம்
- வாகன் நகரத்தின் வாகன் பொது நூலகங்கள் வலைப்பக்கம்

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை

# News Release

கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca